2022 மார்ச் 24] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஆ) தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*